# <u>தேவகோட்டை நகராட்சி</u>

தேவகோட்டை நகராட்சி வளாகத்தில் சாதாரணக்கூட்டம் தனி அலுவலரால் 31.01.2019ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்கண்ட பொருட்கள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

## பொருள் – 647

இந்நகராட்சிக்கு செலுத்தவேண்டிய அனைத்து வரிகளையும் உடன் செலுத்த ஆட்டோ மூலம் அனைத்து வார்டுகளிலும் மைக்செட் விளம்பரம் செய்ய நாள் ஒன்றுக்கு மைக்செட் மற்றும் ஆட்டோ வாடகை உள்பட ஒரு நாளைக்கு எவ்வளவு என்பதற்கு 07.01.2019 அன்று நடைபெற்ற விலைப்புள்ளியில் கீழ்கண்டவாறு மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | பெயர் | வாடகை மைக்செட் படிகள் உட்பட ஒரு நாளைக்கு (ரூ) |
|---|---|---|
| 1. | திரு.எம்.பாலமுருகன்,<br>10, தெற்கு தெரு வசந்தம் நகர், தேவகோட்டை. | ரூ.2000/– |
| 2. | திரு.எஸ்.பாண்டி,<br>30, சொர்ணநாதன் தெரு, தேவகோட்டை. | ரூ.1800/– |
| 3. | திரு.எல்.அருண்குமார்,<br>593, செந்தூர்புரம், தேவகோட்டை. | ரூ.1600/– |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திரு.எல்.அருண்குமார், தேவகோட்டை அவர்கள் கொடுத்துள்ள குறைவான விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>–

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.எல்.அருண்குமார், தேவகோட்டை அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.647, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் – 648

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதார பிரிவின் கீழ் இயங்கி வரும் TN 63 AR 5171 மற்றும் TN63 AR 5166 ஆகிய இரண்டு வாகனங்கள் 06.02.2019 உடன் காப்பீடு முடிவடைவதால் காப்பீடு தொகை ரூ.20,000/– வீதம் இரண்டு வாகனங்களுக்கும் மொத்தம் தொகை ரூ.40000/–த்தினை National Insurance என்பவருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> – மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.648, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் – 649

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதார பிரிவின் கீழ் இயங்கி வரும் வாகனம் TN 63 AQ 1534 வாகனத்திற்கு கீழ்காணும் பழுதுகள் சரிசெய்ய வேண்டியுள்ளதால் ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.17,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) | Engine Oil Duromax | 16 liter |
| | Oil Filter AL | 1 No |
| | Diesal Filter | 1 No |
| | Fuel Kulti Filter | 1 No |
| | Air Filter | 1 No |
| | Coolent Oil | 5 liter |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**–மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.649, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் – 650

தேவகோட்டை நகராட்சி **2019–2022**ஆம் ஆண்டிற்கான மூன்றாண்டு குத்தகை இனங்களில் நகராட்சிக்கு சொந்தமான சைக்கிள் நிறுத்துமிடத்திற்கான குத்தகை உரிமம் பெற **30.01.2019**ம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | இனம் எண். | இனம் | பெயர் | குறைந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி | அதிக பட்ச ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | 9 | சைக்கிள் நிறுத்துமிடம் வசூல் உரிமம். | எம்.சேதுராமன் | ரூ.3,54,000/– | – |
| 2 | 9 | சைக்கிள் நிறுத்துமிடம் வசூல் உரிமம். | செ.ஆறுமுகம் | – | ரூ.3,63,000/– |
| 3 | 9 | சைக்கிள் நிறுத்துமிடம் வசூல் உரிமம். | என்.வெள்ளைக்கண்ணு | ரூ.3,12,000/– | – |

மேற்படி இனத்திற்கு பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. மேற்கண்டவர்களில் வரிசை எண் **3**ல் கண்டுள்ள நபர் ஏலம் மற்றும் டெண்டரில் கலந்து கொள்ள வைப்புத்தொகை மற்றும் கூடுதல் காப்புத்தொகை எதுவும் செலுத்தவில்லை. மேலும் வரிசை எண்.**1** மற்றும் **2**ல் கண்டவர்களில் இரண்டாவது நபரான திரு செ.ஆறுமுகம் என்பவர் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.**3,63,000/–**க்கு கேட்டுள்ளார். அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி கேட்டுள்ள திரு.செ.ஆறுமுகம் என்பவர் மூன்றாண்டுகளின் சராசரி தொகை ரூ.**3,16,300/–**ஐ,விட ரூ.**46,700/–**அதாவது **14.76%**மும் அதிகமாக கேட்டுள்ளார். கடைசி ஆண்டு ஏலத்தொகை ரூ.**3,31,852/–**ஐ விட ரூ.**31,148/– 9.36%**மும் அதிகமாக கேட்டுள்ளார். எனவே அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். அன்னாருக்கு குத்தகை நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்காணும் இனத்திற்கு முதல் ஆண்டுக்கு உரிமம் வழங்கி ஒப்படைப்பு செய்யவும், இரண்டாம் ஆண்டுக்கு முதல்

ஆண்டு ஏலத் தொகையில் இருந்து 5% உயர்வு செய்து உத்தரவு வழங்கவும் (வரிகள் தனி) மூன்றாம் ஆண்டுக்கு இரண்டாம் ஆண்டு ஏலத் தொகையிலிருந்து 5% உயர்வு செய்து (வரிகள் தனி) உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.650, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் – 651

தேவகோட்டை நகராட்சியில் **சட்டமன்ற** உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2016–17-ன் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் எண்:– ந.க.டிஎ8/3237/16, நாள்:– 13.12.2018-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. கீழ்கண்ட பணிகளுக்கு 24.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1 | **தேவகோட்டை நகராட்சி ,18-வது வார்டு முளக்கொட்டு தெருவில் மினி சின்டெக்ஸ் அமைத்தல் பணி.** | 2.77 | 1) திருமதி.எஸ்.ராமு | 0.11% குறைவு |
| | | | 2) திருமதி.சி.சௌந்தரம் | 2.60 % அதிகம் |

அலுவலக குறிப்பு –

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.651, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் – 652

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதார பிரிவின் கீழ் இயங்கி வரும் வாகனம் TN63 AR1534 வாகனத்திற்கு பழுதுகளை சரிசெய்ய 10.01.2019 அன்று விலைப்புள்ளி அறிவிப்பு செய்த வகையில் கீழ்காணும் மூலம் விலைப்புள்ளி மதிப்புகள் வரப்பெற்று உள்ளன.வரப்பெற்ற விலைப்புள்ளி மதிப்புகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ரூ |
|---|---|---|
| 1. | Sri Venkateshwara AutoMobiles & work, 211A, Thiruppathur road, Devakottai. | Rs.16,500 |
| 2. | Sri Kalki sarveshwaran AutoMotive workshop,27D, Natarajapuram 1st street, Devakottai. | Rs.16,000 |
| 3. | Sri Classic AutoMotive Works, 63/3, Rameshwaram Main Road, Devakottai. | Rs.16,200 |

அலுவலகக்குறிப்பு–

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)குறைவான விலைப்புள்ளி விகிதம் வழங்கிய ஸ்ரீவேல் மோட்டார் ஒர்க்ஸ்ஷாப், தேவகோட்டை என்பவரின் விலைப்புள்ளி விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.652, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் – 653

தேவகோட்டை நகராட்சியில் **சட்டமன்ற** உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம்–2017–18-ன் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் எண்:– ந.க.டிஎ8/2642/17, நாள்:– 13.12.2018-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. கீழ்கண்ட பணிகளுக்கு 24.01.209 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது..

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1 | **தேவகோட்டை நகராட்சி 21–வது வார்டு சிதம்பரநாதபுரம் கிழக்கு சிலம்பனி ஊரணி அருகில் செல்லும் கழிவு நீர் கால்வாய் கட்டுதல் பணி.** | 11.60 | 1) திரு.ஆர்.தர்மராஜன் | 0.21 % குறைவு |
| | | | 2) திருமதி. வி.மீனாள் | 2.63 % அதிகம் |

அலுவலக குறிப்பு –

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.653, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் – 654

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.28369/J3/2018, நாள் 22.11.2018ன் படி, இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிக்காக ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் ஓராண்டிற்கு வெளிக்கொணர்வு (Out Sourcing) மூலம் 30 பணியாளர்கள் அமர்த்திக்கொள்ள அனுமதி அளித்ததின் பேரில் 29.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம் பின்வருமாறு

1. **M/s மதுரை மீனாட்சி சாலிட் வேஸ்ட் கிளினிங் ஏஜென்சி, காரைக்குடி**

. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி ஒரே ஒப்பந்தப்புள்ளி மற்றும் முதல் அழைப்பு என்பதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.654, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் – 655

சட்டமன்ற பேரவையில் 04.06.2018 அன்று நடைபெற்ற மான்ய கோரிக்கை(34)யின் போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அறிவிப்பு எண்.6. மூலம் குடிநீர் விநியோகத்தில் புதிய முயற்சியாக அனைத்து நகராட்சிகளில் திட்ட மதிப்பீட்டிலேயே உள்ளடக்கி வீட்டு இணைப்புகள் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வழஙகலாம் என தெரிவித்து வரலான அரசாணை (நிலை) எண்.126, நாள்.28.11.2018ம் தேதிய அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது. இவ்வாணைப்படி

* நகராட்சிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்குதல் தொடர்பான வைப்புத்தொகை மற்றும் இணைப்புக் கட்டணம் ஆகியவை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் பொதுநிதியில் வரவு வைக்கப்படும் என்பதால் அவற்றை தனித்தனியாக அந்தந்த நகராட்சி சொந்த நிதியில் செய்யப்படவேண்டும்.

* குடிநீர் கட்டணம் வைப்புத்தொகை மற்றும் இணைப்பிற்கான கட்டணத்தை அந்தந்த வீட்டு சொத்துவரி கேட்புடன் இணைத்து 10 தவணைகளாக வசூலிக்க வேண்டும்.

* அந்தந்த நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் நடைமுறையில் உள்ள குடிநீர் உபவிதிகளில் உரிய திருத்தங்கள் செய்து நடைமுறைப்படுத்தவேண்டும்.

* திருத்தங்கள் மேற்கொள்ளும்போது தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306–ல் உட்பிரிவு 3 (d) , (e) மற்றும் உட்பிரிவு 5–ன் படி நடவடிக்கை மேற்கொள்ளவும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 309 மற்றும் 310ல் வரையறுக்கப்பட்ட விதிகளை கடைபிடிக்க வேண்டும்.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**– அரசாணையை மன்றம் பதிவு செய்யலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.655, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் – 656

தேவகோட்டை நகராட்சியில் 2018–2019ம் நிதியாண்டில் கீழ்காணும் பல்வேறு திட்டப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு கீழ்காணும் விளம்பர நிருவனத்திடம் இருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | நாளிதழின் பெயர் | பட்டியல் எண் மற்றும் தேதி | தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | பிற்பகல் தமிழ் நாளிதழ் | PP-471/2018-2019 09.01.2019 | ரூ.4725/– |
| 2. | Accord Advertising Agencies. | DIPR/AAA-1087/2018-2019 H.S.C.W.S. Scheme, 30.12.2018 | ரூ.71,820/– |
| 3. | தினமலர் தமிழ் நாளிதழ் | S.M.G.B-055 | ரூ.23,152/– |

| | | தொழில் மலர்<br>18.10.2018 | |
|---|---|---|---|
| | **மொத்தம்** | | **ரூ.99,697/–** |

மேற்காணும் விளம்பர நாளிதழ்களுக்கு மேற்காணும் தொகை ரூ.99,697/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**–மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.656, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் – 657

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13, அண்ணாநகர் பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான அண்ணாநகர் பூங்காவினை சுற்றி சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டு பூங்காவினுள் உட்புறம் மூன்று பக்கமும் பேவர்பிளாக் நடைத்தளம் அமைக்கப்பட்டுள்ளதால் தினமும் ஏராளமானோர் நடைபயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். தற்பொழுது தினமும் நடைபயில வருவோர்கள் பேவர்பிளாக் நடைத்தளத்தை பூங்காவினை சுற்றி முழுமையாக அமைத்து தரவும் மேலும் இப்பூங்காவிற்கு பொழுதுபோக்குவதற்காக தினமும் மாலை வேலைகளில் சிறுவர், சிறுமிகள் மற்றும் பெண்கள் வருவதால் கூடுதல் அபிவிருத்தி பணியாக சிறுநீர் கழிப்பறை வசதி செய்து தருமாறும் ஆணையரிடம் கோரிக்கை வைத்துள்ளனர். மேற்காணும் வசதிகளை செய்து கொடுத்தால் தினமும் மேலும் ஏராளமானோர் பூங்காவிற்கு பொழுதுபோக்கவும் நடைபயிலவும் வருவர். இதன் காரணமாக கட்டண வசூல் செய்யலாம். இதனால் நகராட்சி வருவாய் பெருகும். எனவே மேற்காணும் பூங்காவினுள் பேவர் பிளாக் நடைத்தளம், கழிப்பறை வசதி மற்றும் கூடுதல் அபிவிருத்தி பணிகள் செய்ய ரூ.3,00,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**–மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.657, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள்– 658

தேவகோட்டை நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவு, மற்றும் பொறியியல் பிரிவுகளில் உள்ள பழைய பொருட்கள் மற்றும் பயன்படுத்த முடியாத பொருட்களை பொது ஏலத்தில் விட்டு அப்புறப்படுத்த 2.01.2019 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி / ஏல அறிவிப்பு செய்ததில் நேரடியாக ஏலம் கோர யாரும் முன் வரவில்லை. ஒப்பந்தப்புள்ளி முறையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன் விபரம் பின் வருமாறு,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஏலத்தொகை |
|---|---|---|
| 1. | Y.M ஸ்டீல்ஸ், வெள்ளையன் ஊரணி , | ரூ.30,000/– |

| | | |
|---|---|---|
| | தேவகோட்டை. | |
| 2. | உசேன் இரும்பு வியாபாரம். பழைய சருகனி ரோடு, தேவகோட்டை. | ரூ.27,500/– |

மேற்படி ஒப்பந்தப்புள்ளி முறையில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளிள் கோரப்பட்டுள்ள தொகை உத்தேச மதிப்பை விட குறைவாக உள்ளது. மேற்படி குறைவாக உள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் உத்தேச மதிப்பை விட குறைவாக இருப்பதால் இந்த ஒப்பந்தப்புள்ளிகளை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.658, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் – 659</u>**

சிவகங்கை மாவட்டத்தில் காவேரி கூட்டுகுடிநீர் திட்டத்தில் நாட்டரசன்கோட்டை பேரூராட்சி, இதர 7 பேரூராட்சிகள் மற்றும் 2452 கிராம குடியிருப்புகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆய்வு பணி மேற்கொள்ள இருப்பதாலும், தேவகோட்டை நகராட்சியினை இத்திட்டத்தில் சேர்த்திட மாண்புமிகு கதர் மற்றும் கிராம தொழில்துறை அமைச்சர் அவர்கள் பரிந்துரைத்துள்ளதாகவும் இதற்கு நகர்மன்ற தீர்மான நிறைவேற்றி அனுப்பிடவும் கோரி வரப்பெற்ற செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மதுரை அவர்களின் கடிதம் எண்.0612/F- BODI WSIS/JDO/2018, நாள்.06.12.2018ம் தேதிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் இதன்படி இத்திட்டத்தில் தேவகோட்டை நகராட்சியினை சேர்க்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>–

அ முதலமைச்சரின் அறிவிப்பு 2014–2015ன் கீழ் சிவகங்கை மாவட்ட காவேரி ஆறு கூட்டு குடிநீர் திட்டத்தில் தேவகோட்டை நகராட்சியினை சேர்க்க அனுமதிக்கலாம்.

ஆ) திட்ட நிதியினை அரசிடம் மானியமாக ஒதுக்கிட கோரிடவும், ஆய்வுக்கட்டணம் ரூ.2,00,000/– தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலுத்தவும் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.659, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் – 660</u>**

தேவகோட்டை நகராட்சி குடிநீர் விநியோகத்திற்கு 27 வார்டுகளிலும் உள்ள சிறுமின்விசை ஆழ்துளைக் குழாய் கிணறு நீரேற்றிகள் மற்றும் மும்முனை மின்விசை ஆழ்துளைக் குழாய் கிணறு நீரேற்று நிலையங்களில் இயங்கும் நீரேற்றிகள் பழுதாகும் காலங்களில் உடன் வேறு நீரேற்றிகள் பொருத்தி இயக்கிட தேவையான மாற்று உபயோக நீரேற்றிகள் போதுமான இருப்பு கைவசம் இல்லாததால் உடனடியாக தேவைப்படுகின்றன. எனவே சப்மெர்சிபிள் நீரேற்றிகள், பேனல் போர்டு ஸ்டார்ட்டர்கள் மற்றும் கேபிள் வயர்கள் கீழ்கண்ட விபரப்படி வாங்கிட ரூ.5,00,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதிக்கு.

| நீரேற்றிகள், ஸ்டார்ட்டர்கள் மற்றும் கேபிள் விபரம் | | |
|---|---|---|
| **வ.எண்** | **விபரம்** | **எண்ணம்.** |
| 1. | **1** HP மோட்டார் + ஸ்டார்ட்டர்கள். | 4 + 4 |
| 2. | **5** HP மோட்டார் + ஸ்டார்ட்டர்கள். | 3 + 2 |
| 3. | **7.5** HP மோட்டார் + ஸ்டார்ட்டர்கள் மற்றும் கேபிள் வயர்கள். | 2 + 2<br>220 மீ |

அலுவலகக்குறிப்பு – குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.660, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்) கே.சுதா

ஆணையாளர்/தனி அலுவலர்
தேவகோட்டை நகராட்சி